

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2025) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், செம்பரம்பாக்கத்தில் 66 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சென்னை மாநகருக்கு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ. கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ரூ.66.78 கோடி மதிப்பீட்டில் - செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து

# சென்னை மாநகருக்கு கூடுதலாக - நாளொன்றுக்கு 265 எம்.எல்.டி. குடிநீர் வழங்கும் திட்டம்!

## ‘சென்னை குடிநீர்’ செயலி - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார் !

**சென்னை, செப்.221-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2025) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், செம்பரம்பாக்கத்தில் 66 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சென்னை மாநகருக்கு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.**

மேலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் பொதுமக்களின் புகார்களுக்கு விரைந்து தீர்வு காண உருவாக்கப்பட்டுள்ள “சென்னை குடிநீர் செயலி” என்ற புதிய கைபேசி செயலினையும் தொடங்கி வைத்தார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.9.2025) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் பொதுமக்களின் புகார்களுக்கு விரைந்து தீர்வு காண உருவாக்கப்பட்டுள்ள “சென்னை குடிநீர் செயலி” என்ற புதிய கைபேசி செயலியை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ. கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகருக்கு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம்

கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ், பெறப்பட்ட தண்ணீரை சுத்திகரிப்பதற்காக சென்னைக்கு அருகிலுள்ள செம்பரம்பாக்கத்தில் 296 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிக்கும் நிலையம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரைக் கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டு 19.07.2007 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையத்தின் முதல் வரிசை குழாய் மூலம் நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை மாநகரப் பகுதிகள் மற்றும் தாம்பரம் மாநகரப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை வளர்ச்சிக்கேற்ப பொது மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து முழுக் கொள்ளளவான 530 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்குவதற்காக 66.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில், செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூவிருந்தவல்லி புற வழிச் சாலை சந்திப்பு வரையிலான இரண்டாவது வரிசை குடிநீர்க் குழாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சென்னை மாநகருக்குக் கொண்டு செல்வதற்காக பிரதான குடிநீர்க் குழாய் அமைக்கும் பணிகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதல் பகுதி சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து போரூர் வரை 11.7 கி.மீ. நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகளும், இரண்டாம் பகுதி பூவிருந்தவல்லி புறவழிச்சாலை சந்திப்பிலிருந்து கோயம்பேடு வரை 9.2 கி.மீ. நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### 20 இலட்சம் பொதுமக்கள் பயன்பெறுவர்!

செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர்த் தேவைக்கு ஏற்பவும், பெருகிவரும் சென்னை மாநகரின் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டும், ஏரியின் நீர் இருப்பை கருத்தில் கொண்டும், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து ஏற்கனவே தினசரி வழங்கி வந்த 265 மில்லியன் லிட்டர் குடிநீருடன், கூடுதலாக இத்திட்டத்தின் மூலம் 265 மில்லியன் லிட்டர் குடிநீர் தினசரி வழங்குவதால் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படும். இதன்மூலம் அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் வளசரவாக்கம், ஆலந்தூர், அடையார் மண்டலங்கள், தாம்பரம் மாநகராட்சி, குன்றத்தூர் மற்றும் திருபெரும்புதூர் நகராட்சிகளில் உள்ள 20 இலட்சம் பொது மக்கள் பயன் பெறுவர்.

பல்வேறு நீர் நிலைகள் மற்றும் கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களின் மூலம் சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 1180 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வரும் நிலையில், செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### “சென்னை குடிநீர் செயலி”

பொதுமக்களின் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்ய அனைத்து துறைகளிலும் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், சென்னை குடிநீர் வாரியம், பொதுமக்களின் குறைகள் மற்றும் புகார்களை விரைவாக நிவர்த்தி செய்ய “சென்னை குடிநீர் செயலி” என்ற புதிய கைபேசி செயலினை வடிவமைத்து மக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் தொடங்கி வைத்தார்.

“சென்னை குடிநீர் செயலி” புகைப் படங்களுடன் கூடிய பதிவு செய்யும் வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலி மூலம், பொதுமக்களால் பதிவு செய்யப்படும் புகார்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட புவியியல் தகவல் அமைப்பின் (GIS) மூலம் தானாகவே கணினி வழியாகப் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட உதவி பொறியாளருக்கு குறுஞ்செய்தி மற்றும் WhatsApp வாயிலாக அனுப்பப்படும். மேலும், புகார் பதிவு செய்த நபருக்கு உடனடியாக உறுதிப்படுத்தல் குறுஞ்செய்தியும் அனுப்பப்படும். இச்செயலியின் முக்கிய சிறப்பம்சமாக புகாரின் நிலை குறித்து பொதுமக்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

### தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது!

மேலும், புகார்களை இணையதளம், மின்னஞ்சல், முதன்முறையாக 8144930308 என்ற WhatsApp எண்ணிலும் Facebook, X தளம் போன்ற சமூக வலைதளங்கள் மற்றும் QR CODE மூலமும் பதிவு செய்யலாம். பொதுமக்களின் வசதிக்காக இச்செயலி தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. சென்னை குடிநீர் செயலியினை, Android மற்றும் iOS மொபைல் சாதனங்களில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இப்புகார்கள் அனைத்தும் சென்னை குடிநீர் செயலியில் ஒருங்கிணைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, தொழில்நுட்பமும் நேர்த்தியான நிர்வாகமும் இணைந்து, மக்கள் குறைகளை விரைந்து தீர்க்கும் ஒரு திறந்த மற்றும் பொறுப்புள்ள அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது நம்முடைய குடிமக்கள் சாசனத்திற்கு ஏற்ப ஒரு மாறுபட்ட முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

அதனைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவி நிலநீர் புவியிலாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 2 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

### பங்கேற்றோர்!

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ. கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கே.விவேகானந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப் குமார், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.